(அ) முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட தச்சுப்பட்டறையில் சுமார் ரூ. 20,000 மதிப்புள்ள மரச்சாமான்களும், மரங்களும் காணமல் போயிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) பொருள்கள் குறைவுக்கு முழுப் பொறுப்பான தச்சுப்பட்டறை போதகர் திரு. ஜி. ஜான்சன் 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் நாள் முதல் பணியிலிருந்து தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளார். அவர் மீது அதன் தொடர்பாக குற்றக் குறிப்பு அனுப்பப் பட்டுள்ளது. குறைவு ஏற்பட்ட காலத்தில் பணிபுரிந்த தொழில் விரிவாக்க அலுவலர் திரு. கே. கன்னையனுக்கும் குற்றக் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் முடிவில் அவர்களிடமிருந்து குறையாயுள்ள பொருட்களின் மதிப்பீட்டுத் தொகையை வசூலிப்பது பற்றியும் ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒவ்வொரு நபரிடமிருந்து எவ்வளவு தொகை வசூலிப்பது என்று வரையரை செய்யப்பட்டு இருக்கின்றது. அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கின்றது. எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அமைச்சர் தரப்பிலிருந்து தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இரண்டு பேர்களுக்கும் குற்றக்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து ரிப்ளை வரவில்லை. வந்த பிறகு கிரிமினல் குற்றமா, சிவில் குற்றமா என்று பரிசீலிக்கப்படும். இதுவரையில் 19,338 குறைவு ஏற்பட்டு இருக்கின்றது. மேலே தணிக்கை செய்யப்பட்ட பிறகு எவ்வளவு தொகை, யாரால் என்று சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. வகாப் : பொதுவாக ஒன்றியங்களிலே இயங்குகின்ற இப்படிப்பட்ட தச்சுப் பட்டறைகளில் மரங்களை வாங்குவதில் சில முறை கேடுகள் இருப்பதால்தான் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. பொதுவான கொள்கையை ஏற்படுத்தி இன்னார்தான் மரத்தை வாங்க வேண்டுமென்ற அடிப்படையை ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்க்க முடியும். அரசு அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதுவரை அப்படிப்பட்ட யோசனை சொல்லப்படவில்லை. இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கு. அ. பொம்மன் : தச்சுப் பட்டறைகளுக்கு மரங்களை வாங்கும்போது வனத் துறையிலிருந்து வாங்கப்படுகிறதா அல்லது தனியார் துறையில் இன்டென்ட் செய்து வாங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்போதைக்கப் போது சவுகரியத்திற்கேற்றபடி செய்யப்படுகிறது. இன்டெண்ட் மூலமும் வாங்குகிறார்கள், வன இலாகாவில் ஏலமும் எடுக்கிறார்கள்.

Housing Schemes.

* 399 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Housing Board has prepared housing schemes for 1973–74 for each district in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவை முன் ஓர் அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : மொத்தம் எத்தனை வருஷங்களில் இந்தத் திட்டம் பூர்த்தியாகும் ? மத்திய சர்க்கார் பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இப்போது இதற்கு மத்திய சர்க்கார் பங்கு ஒன்றும் அதிகமாக இல்லை. தொகை ஏராளமாகச் செலவாகிறது. பல நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. 1973-74ம் ஆண்டில் அரசு 287.89 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஒரு கோடி ரூபாய் டிபென்சர் மூலமாக பொதுமக்களிடத்தில் இருந்து பெற்றிருக்கிறோம். ஒரு கோடி 10 லட்சம் வரை அதிகமாக வசூலாயிருக்கிறது. அதையும் வைத்துக் கொண்டு இந்த வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். சில வேலைகளுக்கு நில ஆர்ஜிதம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ஆறுமுகம் : எடப்பாடி தொகுதி நெசவாளர்கள் மிகுந்த தொகுதி. அங்கு இந்தத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பல முறை கேட்டும் அதற்கான மனு அனுப்பப்பட்டும் நாளது வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு துரிதமாக ஒரு திட்டத்தை நிறைவேற்றி அந்த நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நெசவாளர்களுக்காகப் பல இடங்களில் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியாக வீடுகள் கட்டுவது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. திருச்சி, மதுரை, சேலம் போன்ற பெருநகரங்களில் நெசவாளர்களுக்கான நிலங்கள் ஆர்ஜிதமாகிக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் முடிந்தவுடன் எடப்பாடி எடுத்துக் கொள்ளப்படும்.

@456-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.